# பரதநாட்டியக்கலை அன்றுதொட்டு இன்றுவரை

சுவாமிமலை கே. ராஜரெத்தினம்

நமது பரதநாட்டியக்கலை எனக்குத் தெரிந்த வகையில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்டு வந்த நாட்டியக் கச்சேரிகளின் தரத்துக்கும், கடந்த 40 ஆண்டுகளாக நடத்தப்பட்டுவரும் நாட்டியக் கச்சேரிகளின் தரத்தையும் ஒப்பிட்டால் அநேக விதங்களில் எத்தனையோ சிறப்பு இயல்புகளைப் பெற்றுத் திகழ்வதை நம்மால் அறியமுடிகிறது.

சம்பிரதாயத்துக்கு எந்த விதமான குறைபாடும் ஏற்படாவண்ணம் பலப்பல சிறப்பு உத்திகள் கையாளப்பட்டு அவைகள் மேன்மேலும் சிறப்பாக செயல்பட்டு வந்துகொண்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. என்றாலும் ஒரு சில நிகழ்ச்சிகள் மனதுக்கு திருப்தி அளிக்கக்கூடிய வகையில் இல்லாமல் போனாலும் கடந்த 40 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வரும் பரதநாட்டியத்தின் தரம் எல்லோரும் பெருமையடையும் வகையில் உயர்த்தப் பட்டுள்ளது என்பதை நாம் நன்றாக உணர முடிகிறது.

பண்டைய காலத்தில் ஒருசில குறிப்பிட்ட வகையினரால் ஆடப்பட்டுவந்த சதிர் கச்சேரி என்ற இந்தக்கலை அந்த காலகட்டத்தில் அதை ஆதரித்த மன்னர்கள், மற்றும் அரசு பிரதிநிதிகள், சமஸ்தானாதிபதிகள் ஆகியோரை திருப்திப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தால் நரஸ்துதியாக அவர்கள் பேரில் இயற்றப்பட்ட பாடல்களையே பெருமளவில் ஆடி வந்திருக்கிறார்கள் என்பதை நாம் பலர் சொல்லக்கேட்டும், ஏடுகள் வாயிலாகவும் அறிந்திருக்கிறோம்.

ஆனால் கடந்த 40 ஆண்டுகளுக்குள் அப்படிப்பட்ட பாடல்கள் பெருமளவில் ஒதுக்கப்பட்டு நாகரீகத்துடன் மதுரபக்தியும், உத்தம ஸ்ருங்காரத்தை ப்ரதிபலிக்கும் வகையில் உள்ள பழைய பாடல்களோடு ஒருசில புதிய பாடல்களும் பரதநாட்டியத்தில் இடம்பெற்று புதுப்பொலிவினைப் பெற்றுத் திகழ்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்ட ஒரு சில நாட்டிய நிகழ்ச்சிகளை காணுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்த நிகழ்ச்சிகளில் திரும்பத் திரும்ப ஒன்றிரண்டு பதர்வர்ணங்கள், ஒருசில ஜதிஸ்வரங்கள், ஒருசில பதங்கள் மட்டுமே அக்காலத்தில் வாழ்ந்த நாட்டிய கலைஞர்களால் ஆடப்பட்டு, பரதநாட்டிய மென்றால் இந்த நிலையில் தான் இருக்கவேண்டும் என்ற தலைவிதி போல் தீர்மானம் செய்ததுபோல் நடத்தப்பட்டு வந்தது என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

இப்படிப்பட்ட பாடல்களில் புனையப் பட்டுள்ள வார்த்தைகளை நாம் எடுத்துக் கொண்டு பார்த்தால் அடிக்கடி ஒரே மாதிரியான வார்த்தைப் பிரயோகம் வருவது மட்டுமல்லாமல் ஒருசில பாடல்களில் விரசபாவம் தலைதூக்கி இருப்பதையும் காணமுடியும்.

பிறகு இக்கலையில் ஒருசில மாற்றங்கள் ஏற்படத் துவங்கின. நாட்டியக் கச்சேரிகளில் ரூபக தாளத்தில் எல்லா நாட்டிய மணிகளாலும் திரும்பத்திரும்ப ஆடப்பட்டு வந்த அலாரிப்பு என்ற நடனம் ஒரு சில மாற்றத்தைப் பெற்று பஞ்ச நடைகளில் அலாரிப்பு நடத்தவும், ஒருசில கச்சேரிகளில் சிறந்த பக்திஸ்ரேஷ்டர்களால் இயற்றப்பட்ட பக்திப் பாடல்களில் ஒருசில ஆரம்ப நிகழ்ச்சியாக நடத்தவும், கோவில்களில் நாதஸ்வர வித்வான்களால் வாசிக்கப்படும் மல்லாரி என்ற ஸ்வரஜதிக் கோலமும் நாட்டியமாக நடத்துகின்ற வழக்கம் ஏற்பட்டு சிறப்பாக செயல்படத் துவங்கியது.

அந்த வகையில் மறைந்த பரதநாட்டிய வித்வான் கலைமாமணி வைத்தீஸ்வரன் கோயில் முத்துஸ்வாமிபிள்ளை அவர்களுக்கு பெரும் பங்கு உண்டு.

அதைப்போல ஒருசில பதங்களையே திரும்பத்திரும்ப அபிநயம் பிடித்த வழக்கம்மாறி பல மொழிகளிலும் மறைந்து கிடந்த நல்ல நல்ல பதங்களையெல்லாம் தேடிக்கொணர்ந்து அவைகளை மேடைகளில் அபிநயம் செய்கின்ற வழக்கமும் ஏற்பட்டது. அந்த வகையில் பத்மபூஷன் திருமதி கலாநிதி நாராயணன் அவர்களை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

மேலும் நான் சார்ந்துள்ள வழுவூர் ராமையா பிள்ளை அவர்கள் தன்னுடைய நாட்டிய நிகழ்ச்சிகளை எப்படியெல்லாம் நடத்தினார், யார்யாருடைய படைப்புகளையெல்லாம் மேடையேற்றி பிரபலப்படுத்தினார் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்வது பொருத்தமுடையதாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

பழமையான பாடல்களில் உத்தம ஸ்ருங்காரத்தை விளக்கக்கூடிய பாடல்களையும் நல்ல சன்மார்க்கத்தையும் விளக்கக்கூடிய பல பாடல்களை விட்டு விடாமல் அவைகளை மேடைகளில் நடத்தியதோடு பல பக்தி ஸ்ரேஷ்டர்களால் இயற்றப்பட்ட பல படைப்புகளையும் நாட்டிய கச்சேரிகளில் இணைத்துத் திறம்பட எல்லோரும் பாராட்டும் வகையில் நடத்தினார் என்பதை இக்கலை உலகம் நன்கு அறியும்.

அந்த வகையில் ஸ்ரீ தியாகராஜர், ராமலிங்க வள்ளலார், அருணாசல கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, மஹாராஜா ஸ்வாதித்திருநாள், திரிகூடராசப்ப கவிராயர், பாபநாசம் சிவன் போன்றவர்களின் நல்ல பாடல்களைப் பரத நாட்டியத்தில் சேர்த்து, நாட்டிய வடிவம் கொடுத்து ரசிகப் பெருமக்களால் ஏகோபித்தப் பாராட்டுக்களைப் பெற்றுத் திகழ்ந்தது. அந்த வகையில் அவர் ஆற்றியுள்ள சேவை மகத்தானது, பெருமைக்குறியது என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த வரிசையில் நான் நாட்டியக் கலைப்பணி செய்யத்துவங்கிய கடந்த 35 ஆண்டுகளில் பல நல்ல கருத்துள்ள பாடல்களை சம்பிரதாயமான பழைய படைப்புகளுக்கு இடையில் நாட்டியம் அமைத்து நடத்தி வந்திருக்கிறேன் என்பதும், அநேக மாணவிகளுக்கு அதையெல்லாம் நாட்டிய வடிவம் செய்து அரங்கேற்றியிருக்கிறேன் என்பதும் எல்லோரும் அறிந்த விஷயம்.

திரு. லால்குடி ஜெயராமன் அவர்களால் இயற்றப்பட்ட பல பதவர்ணங்கள், தில்லானாக்கள் மேலும் பல வாக்கேயக் காரர்களால் இயற்றப்பட்ட பல பாடல்கள் எனது நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம் பெறுவதை பழக்கமாக்கிக்கொண்டேன்.

திரு. சுப்பராம தீக்ஷிதரால் இயற்றப்பட்ட ''ஸாமி எந்த தெலு புதுரா'' என்ற பதவர்ணத்தை அனுராதா ஜகந்நாதன் என்ற எனது மாணவிக்கு பயிற்றுவித்து முதன் முதலில் மேடையேற்றினேன். கலா மந்திர் ட்ரஸ்ட் மூலமாக நடந்த அந்த நிகழ்ச்சி எல்லோரது பாராட்டையும் பெற்றது.

மேலும் அன்னமாச்சார்யார் அவர்களால் இயற்றப்பட்ட பல பாடல்களுக்கு நாட்டிய வடிவம் கொடுத்து ஆட வைத்திருக்கிறேன். அதில்:

| | | |
|---|---|---|
| 1. | அலருலு குரியக | சங்கராபரணம் |
| 2. | இந்தரிகி அபயம்பு (தசாவதாரம்) | ராகமாலிகை |
| 3. | பாவயாமி கோபாலபாலம் | யமுனா கல்யாணி |
| 4. | ஸ்ரீமன் நாராயணா | பௌளி |
| 5. | வந்தேவாசுதேவம் | ஸ்ரீராகம் |
| 6. | டோலாயாம் | கமாஸ் |
| 7. | க்ஷீராப்தி கன்யநகு | குறிஞ்சி |

போன்ற பாடல்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இவைகளில் "இந்தரிகி அபயம்பு" என்ற தசாவதாரப் பாடலுக்கு நானே வர்ண மெட்டும் அமைத்திருக்கிறேன்.

சம்பிரதாயமான முறையில் 5 கர்நாடக ராகங்களில் அமைக்கப்பட்ட அந்தப் பாடலும், அதற்கான நாட்டிய அமைப்பும் இந்தியாவில்

மட்டுமல்லாது பல வெளிநாடுகளிலும் என்னுடைய பல மாணவிகளால் ஆடப்பட்டு நல்ல புகழ் அடைந்துள்ளது.

இதைத்தவிர மகாகவி சுப்ரமண்ய பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அன்னாரது பாடல்களை பரதநாட்டிய சம்பிரதாயப்படி புஷ்பாஞ்சலியாகவும், சப்தமாகவும், வர்ணமாகவும், பதங்களாகவும், தில்லானாவாகவும் என்னால் வர்ணமெட்டும், நாட்டியக் கோர்ப்பும் அமைக்கப்பட்டு பரதத்தில் பாரதி என்ற தலைப்பில் 10 மாணவிகளை ஆடச்செய்து அரங்கேற்றினேன். அவைகள் முறையே பொள்ளாச்சி தமிழிசைச்சங்கத்திலும், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியின் கலைவிழாவிலும் நடத்தப்பட்டு எல்லோரது பாராட்டுதலையும் பெற்றுத்தந்தது. இந்த நிகழ்ச்சி மேடையேறுவதற்கு முன்பாக நடந்த ஒரு சிறப்பான சம்பவத்தை இங்கே கூறவேண்டுமென்று நினைக்கிறேன்.

இந்த நாட்டிய நிகழ்ச்சிக்காக 10 பாடல்களைத் தேர்ந்தெடுத்து நானே வர்ண மெட்டமைத்து நாட்டிய கோர்ப்பும் செய்யத் துவங்கினேன். அது முழுவதுமாக முடிவடையாமல் இருந்த நிலையில் அதில் வர்ணமாக நடத்துவதாக இருந்த "கண்ணன் மனநிலையை" என்ற பாடல் ஸ்வரங்களும் தீர்மானங்களும் மட்டும் முடிவடைந்த நிலையில், பொள்ளாச்சியில் நடத்துவதாக நாங்கள் கொடுத்திருந்த தேதி மிக அருகில் நெருங்கிவிட்ட படியால், அபிநயப்பகுதிமட்டும் பாக்கியாக நின்றுவிட்ட நிலையில், எப்படி சீக்கிரம் முடிக்கப் போகிறோமோ என்ற பரபரப்பு ஏற்பட்ட நிலையில், எனது மாணவிகளில் ஒருவராகிய ரம்யா ஹரிசங்கர் என்பவரிடம் இந்தப்பாடலைக்கொடுத்து உன்னால் முடிந்த அளவில் அபிநயக்கோர்ப்பு செய்துகொண்டு வந்துவிடு என்று சொல்லி விட்டேன். ஆனால் நான் எதிர்பாராதவிதமாக அந்த அபிநயப்பகுதியை சிறப்பான முறையில் நிறைவு செய்து எங்கள் எல்லோரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தி விட்டார். அவர் என்னிடத்திலும், திருமதி கலாநிதி நாராயணனிடத்திலும் முறையாக பரத நாட்டியம் கற்றுக்கொண்ட ஒரு சிறந்த மாணவி என்பதை அன்றைய நிகழ்ச்சி உறுதிப்படுத்தியது.

தொடர்ந்து என்னுடைய நாட்டிய நிகழ்ச்சிகளில் நல்ல கருத்துள்ள தமிழ் பாடல்களை இடையிடையே புகுத்தி நடத்துவதை பழக்கமாக்கினேன். அப்படி செய்ததின் மூலம் என் மனதுக்கு நல்ல திருப்தியும், சந்தோஷமும் ஏற்பட்டதை மறுப்பதற்கில்லை.

இன்னும் எத்தனையோ சிறந்த வாக்கேயக்காரர்களால் எழுதப்பட்ட எத்தனையோ படைப்புகள் நம்மிடையே இருக்கின்றன. அவைகள் சம்பிரதாயமான முறையில் நல்ல ரம்யமான ராகங்களில் அமைக்கப்பட்டு நாட்டியக் கச்சேரிகளில் இடம் பெற்றால் அவை எல்லோராலும் விரும்பி வரவேற்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இப்படி நான் சொல்வதாலும், எழுதுவதாலும் பழைய சம்பிரதாயத்தை ஒட்டிய படைப்புகளை விரும்பவில்லை யென்றோ, பண்டைய சம்பிரதாயங்களுக்கு விரோதியென்றோ யாரும் கருதுவார்களே யானால் அவர்கள் என்னை மன்னிக்கக் கோருகிறேன்.

பரதக்கலை வளர்ச்சிக்கு இடமில்லாமல் பண்டைய புராதன சம்பிரதாயம் என்ற கவசத்தை அணிவித்து வாய்வலிக்க பேசிக்கொண்டிருப்பதால் என்ன நன்மை ஏற்படப்போகிறது ?

எதிர்காலத்தில் நமது தமிழகத்துக்கே உரித்தான இந்த பரதக்கலை சம்பிரதாயத்துக்கு விரோதமில்லாமல் பல நல்ல உத்திகள் கையாளப்பட்டு சீரும் சிறப்புமாக செழித்தோங்க வேண்டு மென்பதே என்னுடைய நம்பிக்கையாகும்.

வாழ்க பரதக்கலை.

வளர்க, புதிய முயற்சிகள்.